பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
05 01 2025 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி தில்லியில் இன்று 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

2. நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

4. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ஜாக் சல்லிவன் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

5. தில்லியில் நிலவும் அடர் மூடுபனி காரணமாக ரயில் மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தில்லியில் இன்று 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார்.

ஷாஹிபாபாத் - நியூ அசோக்நகர் இடையே 13 கிலோ மீட்டர் நீளத்திற்கு 4 ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய வழித்தடத்தில் நமோ பாரத் ரயில் சேவையை அவர் தொடங்கி வைக்கிறார்.

இந்த ரயிலில் பிரதமர் பயணம் மேற்கொள்ள உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜனக்புரி – கிருஷ்ணாபுங்கா இடையே ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ வழித்தடத்தையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் ரிதாலா – குண்டலி இடையே 26 புள்ளி 5 கிலோ மீட்டர் தொலைவிலான 4வது கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

புதுதில்லி ரோஹினியில் உள்ள மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் மேற்கொள்ளப்படட உள்ள கட்டுமானப் பணிகளையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள மோத்திபாக் பகுதியில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதியை அவர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், புதுதில்லி நகராட்சி கவுன்சில் சார்பில் பணிக்குச் செல்லும் 500 பெண்கள் பாதுகாப்பாக தங்கும் வகையில் இந்த விடுதி கட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் பெயரில் அமைக்கப்பட்டுள்ள இந்த விடுதி, பெண்களுக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கும் என்று கூறினார்.

நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமாக செயல்படுவது குறித்து மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் இடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

<<<<>>>>

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் கந்த்வா மாவட்டத்தில் ஓம்கரேஷ்வர் மிதக்கும் சூரிய மின்சக்தி திட்டத்தை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டம் நாட்டிலேயே முதலாவது மிகப்பெரிய மிதக்கும் சூரிய உற்பத்தி திட்டமாகும் என்று கூறினார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் 500 ஜிகாவாட் மின் உற்பத்தியை எட்டவும், 2047ஆம் ஆண்டுக்குள் ஆயிரத்து 800 ஜிகாவாட் மின் உற்பத்தியை எட்டுவதற்கும் மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி செய்தி பிரிவுக்கு அவர் அளித்துள்ள பிரத்யேக பேட்டியில், தனிநபர் குறித்த தகவல்கள் மற்றும் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் வரைவு விதிகள் வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள், குழந்தைகள் எதிர்கொள்ளக்கூடிய டிஜிட்டல் அபாயங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், மக்கள் தங்கள் உரிமைகளை எளிதாகப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த வரைவு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

டிஜிட்டல் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்த ஏதுவாக இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. ஜாக் சல்லிவன் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர்., தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் விண்வெளி, பாதுகாப்பு, உத்திசார் தொழில்நுட்பம், இந்தோ – பசிபிக் பிராந்தியம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இருதரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

அதிமுக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்புகள், வளர்ந்து வரும் தொழில்நுட்பம் போன்ற முன்முயற்சியில் ஈடுபட்டுள்ள தொழில்முனைவோரை சந்தித்துப் பேச உள்ளார்.

<<<<>>>>

இந்தியா – பிரான்ஸ் இடையே கூட்டுக் கடற்பயிற்சியில் பங்கேற்க பிரெஞ்ச் கடற்படைக்குச் சொந்தமான அணுசக்தியால் இயங்கும் விமானம் தாங்கி போர்க்கப்பலான **Charles D Gaulle** போர்க்கப்பல் கோவா துறைமுகம் வந்தடைந்தது.

மர்ம கோவா துறைமுகத்தில் பிரெஞ்ச் போர்க்கப்பலுக்கு கடற்படை இசைக்குழுவின் சார்பில் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கு இடையே ஆண்டுதோறும் நடைபெறும் வருணா எனப்படும் கடற்படைப் பயிற்சியில் ரஃபேல் ரக போர் விமானங்கள் உள்ளிட்ட பல்வேறு விமானங்களும் பங்கேற்கின்றன.

இந்தப் பயிற்சி மூலம் இருதரப்பு கடற்படை ஒத்துழைப்புகள் மேம்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாகை மாவட்டம் சம்பாதோட்டம் பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்கள் சென்ற விசைப்படகு கடலில் பழுதாகி இலங்கை கடற்பகுதிக்குள் சென்றது.

இதையடுத்து அந்தப் படகில் உள்ள மீனவர்களை பத்திரமாக மீட்பதற்காக சென்ற மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குச் சென்று அவர்களை மீட்பதற்கான அனுமதியை எதிர்பார்த்து காத்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நாட்டின் வட மாநிலங்களில் தொடர்ந்து இரண்டாவது நாளாக அடர்த்தியான மூடுபனி நிலவுகிறது.

நாட்டின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் உள்ள மாநிலங்களில் அடுத்த 4 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலையில் எவ்வித மாற்றமும் இருக்காது என்று தெரிவித்துள்ளது.

வடக்கு மத்தியப்பிரதேசம், பீஹார், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு இரவு நேரத்திலும், அதிகாலை வேளையிலும் அடர் மூடுபனி நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக பல மாநிலங்களில் ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தில்லியில் நிலவும் கடும் பனிமூட்டம் மற்றும் மோசமான வானிலை காரணமாக 45 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், 20 விமானங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் இந்திரா காந்தி சர்வதேதச விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

தலைநகர் தில்லிக்கு செல்லும் 40 ரயில்கள் 5 மணி நேரம் தாமதமாக செல்லும் என்று ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சீனாவில் கடந்த சில வாரங்களாக சுவாச நோய்கள் அதிகரித்து வருவது குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் ஆலோசனை மேற்கொண்டது.

புதுதில்லியில் நடைபெற்ற சுகாதார சேவைகளுக்கான கூட்டுக் கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உலக சுகாதார அமைப்பு, பேரிடர் மேலாண்மைப் பிரிவு, ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம், தேசிய நோய் கட்டுப்பாட்டு மையம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் மருத்துவமனைகளின் துறைசார்ந்த நிபுணர்கள் இதில் பங்கேற்றனர்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற 162 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3ஆம் நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 161 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ரிஷப் பந்த் அதிகபட்சமாக 61 ரன் எடுத்தார்.

ஆஸ்திரேலியாவின் ஸ்காட் போலந்த் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 162 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் ஆஸ்திரேலியா உணவு இடைவேளையின்போது 3 விக்கெட் இழப்புக்கு 71 ரன் எடுத்துள்ளது.

இந்தியாவின் பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்சில் 185 ரன்னுக்கும், ஆஸ்திரேலியா 181 ரன்னுக்கும் ஆட்டமிழந்தது.

<<<<>>>>

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் கலிங்கா அணி – சூர்மா அணியையும், தமிழக அணி – உத்தரப்பிரதேச அணியையும் எதிர்கொள்கின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்கால் அணி – தில்லி அணியையும், குணசிகா அணி – ஹைதராபாத் அணியையும் வென்றன.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பஞ்சாப் அணி – கேரள அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் கோவா மற்றும் ஜம்ஷெட்பூர் அணிகள் வெற்றி பெற்றன.

**<<<<The End>>>>**